**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

05.03.2026

C.O.S. No. 3/2024

D.W. 2 திரு.ராபர்ட் விக்டர் எட்வர்ட்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) :-**

நான் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் தனிப்பட்ட முறையில் நான் தரப்பினர் அல்ல. எங்கள் கல்லூரி ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது. நான் தற்போது அந்த கல்லூரியில் பணியாற்றவில்லை என்றால் சரிதான். 2023 ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

கல்லூரி கட்டிடம் கட்டுவது தொடர்பாக இந்த வழக்கின் வாதிக்கும், எங்கள் கல்லூரிக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த ஒப்பந்தம் 04.11.2020 ல் ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் நான் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஒப்பந்தத்திற்கு பிறகுதான் கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை ஒதுக்கி வாதிக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் 3 அடுக்கு மாடி கட்டிடம் கட்டுவதற்கு வேலையை வாதி ஆரம்பித்தார் என்றால் சரிதான்.

கட்டிட வேலை ஆரம்பித்த கால கட்டம் கொரோனா கால கட்டம் என்றால் சரிதான். ஆனால் அப்போது ஊரடங்கு விலக்கப்பட்டிருந்தது. கல்லூரி

திறந்துதான் இருந்தது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கொரோனா கொடுந்தொற்று காரணமாக அந்த கால கட்டத்தில் கல்லூரி திறக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மாணவர்கள் வரவில்லை. அலுவலகம் திறக்கப்பட்டுதான் இருந்தது. அவ்வாறு மாணவர்கள் வரவில்லை என்றாலும் அலுவலகம் திறக்கப்பட்டிருந்தது என காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

3 அடுக்கு மாடி கட்டிடம் கட்டுவதற்கான மதிப்பீடு ஒப்பந்தத்தின்படி ரூபாய் 1,39,90,250/- என்றால் தொகை எனக்கு ஞாபகம் இல்லை. ஜல்லி, சிமெண்ட் போன்ற கட்டிடம் கட்டுவதற்கான பொருட்களை வாதி இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பிறகு கல்லூரியில் இறக்கினார் என்றால் சரியல்ல. நாங்கள்தான் கட்டிடம் கட்டுவதற்கு என்ன பொருட்கள் தேவையோ அவற்றை அவர் கேட்கும் சமயத்தில் கொடுத்து வந்தோம். சிமெண்ட் மற்றும் கம்பியை தவிர பாக்கியுள்ள அனைத்து கட்டிடம் கட்டுவதற்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் கல்லூரி தான் கொடுக்க வேண்டும் என்று வா.சா.ஆ. 1 ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வேலை தொடங்கிய நாளிலிருந்து வாதி அவர்கள் ஆட்களை கூட்டி வந்து வேலை செய்தார் என்றால் சரிதான். முதல் மாடி வரையில் செய்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் வாதி தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தின் மேற்கூரையை தவிர மற்ற கட்டுமானங்களை ஒப்பந்தப்படி கட்டினார் என்றால் சரிதான். ஆனால் சொன்ன கால கட்டத்தில் அவர் கட்டவில்லை.

ஒப்பந்தப்படி 3 அடுக்கு கட்டிடத்தை கட்டுவதற்கு 15 ஆழத்திற்கு பள்ளம் தோண்டி அதில் பில்லர் எழுப்பி கட்ட வேண்டும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. கட்டிடம் கட்டுவதற்கு பில்லர் போட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும், எவ்வளவு ஆழம் என்று தெரியாது. ஒவ்வொரு பில்லரும் போட்டு 15 நாள்களுக்கு நீர் ஊற்றி வைத்தால் தான் அந்த பில்லர் உறுதி தன்மையோடு இருக்கும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதேபோல கட்டிடத்தில் உள்ள sunshade, முதல் மாடியின் கூரை, படிக்கட்டு ஆகியவையும் கட்டப்பட்டு 15 நாள்கள் வரையில் தண்ணீர் ஊற்றி காய வைத்தால்தான் உறுதியாக இருக்கும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஆனால் அவற்றால் வேலைக்கு தடை இருக்காது, வேறு இடத்தில் வேலை செய்யலாம். நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு செய்தால் கான்கீரிட் போட்ட இடத்தில் உறுதிதன்மை பாதிப்பு ஏற்படும் என்றால் சரியல்ல. Centering மற்றும் கம்பி கட்டி கூரை போடும் வேலைகள் அனைத்தையும் வாதி ஆட்கள் கொண்டு செய்தார் என்றால் சரியல்ல. அவர் முழுமையாக கொண்டு வராததால் கல்லூரி செயலாளர் வேறு ஏற்பாடுகள் செய்து ஆட்களை கூட்டி வந்து அதை முடித்தார். அவ்வாறு கல்லூரி செயலாளர் வேறு ஆட்களை வைத்து வேலையை செய்தார் என காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வாதியுடன் இருந்த ஒரு கருத்து ஒற்றுமையின் பேரில் அது செய்யப்பட்டது. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அது முழுவதும் வாதிதான் செய்தார் என்றாலும் சரியல்ல.

சிமெண்ட், கம்பி தவிர்த்து மற்ற கட்டுமான பொருட்களை வாதி பெற்று பயன்படுத்தி, அதற்கான பில்களை எங்கள் கல்லூரியில் கொடுத்து, எங்கள் கல்லூரி அதற்கான தொகையை கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அதேபோல வாதி கொண்டு வரும் வேலையாட்களின் சம்பளத்தையும், வாதி பில் மூலமாக எங்களிடம் கோரி நாங்கள் அதை அவருக்கு கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். 3 அடுக்கு மாடி கட்டிடத்தில், ஒவ்வொரு அடுக்கிலும் 9 வகுப்பு அறைகள், கழிவறைகள் மற்றும் லேப், வராண்டா ஆகியவை உண்டு என்றால் சரிதான். ஒவ்வொரு வகுப்பறையும் 20 x 30 அடி அளவு கொண்டது என்றால் சரியல்ல. ஒவ்வொரு வகுப்பறையும் ஒவ்வொரு அளவு கொண்டது. ஒவ்வொரு தளமும் 9000 சதுர அடி பரப்பளவு கொண்டது என்றால் சரிதான். 18.06.2021 தேதியிட்ட அறிவிப்பு வாதிக்கு சார்பு செய்யப்பட்டதாக ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கல்லூரியில் செய்திருக்கலாம். என்னிடம் காட்டப்படுவது பி.வா.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அசல் அறிவிப்பு என்றால் சரிதான். வழக்கு பிராதுடன், அனைத்து விதமான பில்களை வாதி தாக்கல் செய்துள்ளதை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வாதி ரூபாய் 80,00,000/- த்திற்கான இந்த கட்டிடம் கட்டியதற்கான ஆவணங்களை பிராதுடன் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ரூபாய் 80,00,000/- த்தை வாதி பெற்றுக்கொண்டாரா என்றால் சுமார் 79,00,000/- பெற்றுக்கொண்டார்.

வாதி எங்களுடைய கல்லூரியில் ரூபாய் 80,00,000/- த்திற்கான கட்டுமான வேலையை செய்தார் என்றால் ஏறக்குறைய ரூபாய் 80,00,000/- செய்தார்.

அந்த முழுத் தொகையும் கொடுக்கப்பட்டது. அவ்வாறு முழுத்தொகையும் கொடுத்ததை காட்டும் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது கல்லூரியில் இருக்கும். ஒரே தவணையாக கொடுக்கவில்லை. பல தவணைகளாக கொடுக்கப்பட்டது. எங்கள் கல்லூரியிலிருந்து ரூபாய் 20,14,781/- வாதிக்கு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. எல்லாத் தொகையும் கொடுக்கப்பட்டுவிட்டது. வாதி எங்கள் கல்லூரிக்கு பி.வா.சா.ஆ. 21 கடிதம் கொடுத்தார் என்றால் சரிதான். அந்தக் கடிதத்தில் இரண்டாவது தளத்தின் மேற்கூரை மட்டும் வேறு வகையில் செய்வதற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்று வாதி அந்த கடிதத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 1 ஒப்பந்தத்தை ரத்து செய்து வேறு யாருக்கும் அந்த பணியை இது வரையில் கொடுக்கவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. கட்டிட ஒப்பந்தத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் சமயத்தில் விண்ணப்பதாரர்கள் ரூபாய் 1,00,000/- தொகை எங்கள் கல்லூரியில் கட்டி வைக்க வேண்டும் என்றால் அவ்வாறு நிபந்தனை இருந்தது. அந்த ரூபாய் 1,00,000/- த்தை வாதி எங்களிடம் கட்டி வைத்து அந்த ஒப்பந்தப்புள்ளி வாதிக்கு கிடைத்தவுடன் அந்த தொகையை Security ஆக எங்கள் கல்லூரி நிறுத்தி வைத்துள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த Security தொகையை எங்கள் கல்லூரி இதுவரையில் வாதிக்கு தரவில்லை என்றால் நான் கல்லூரி பணிபுரிந்த வரையில் வாதி எங்கள் கல்லூரி வரவும் இல்லை, அந்த தொகையும் கேட்கவும் இல்லை. வாதி கல்லூரியின் தாளாளரை சந்தித்து பலமுறை கேட்டும், அந்த Security தொகையும், மீதி கொடுக்க வேண்டிய

ரூபாய் 20,14,781/- யும் இதுவரையில் கொடுக்கவில்லை என்றால் வாதிக்கு எந்த தொகையும் பாக்கி கொடுக்க வேண்டியது இல்லை. நான் பணியிலிருந்த போதே அவருக்கு கொடுக்க வேண்டிய தொகை அனைத்தும் கொடுக்கப்பட்டுவிட்டது. Security தொகை மட்டும் கொடுக்கப்பட்டதா என தெரியவில்லை. ஒப்பந்தபுள்ளி ஏற்படும்போதோ, ஒப்பந்தம் ஏற்படும்போதோ அந்த கட்டிடம் MBA, MCA வகுப்புகளுக்காக தேவைப்படுகிறது என்று ஒப்பந்தப்புள்ளியிலோ, ஒப்பந்தத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த தேவைக்காகதான் கட்டப்பட்டது.

வேலையாட்கள் கிடைக்காத கொரோனா காலக் கட்டத்திலும், வாதி ரூபாய் 80,00,000/- த்திற்கான கட்டிடத்தை கட்டி தந்துள்ளதால் வாதிக்கு கொடுக்க வேண்டிய மீதித் தொகையான ரூபாய் 20,14,781/- ஐ கொடுக்க பிரதிவாதிகள் கடமை பட்டவர்கள் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு செலவுதொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல.